[ஞா]யிறு வெளியீடு தனிப்பிரதி 0—1—3 REGD No. M. 4642.

# திராவிடநாடு

மலர் 5 | 22—12—46 | இதழ் 33

## ★ ஒரே ஒரு பாடல்!! ★

(நக்கீரன்)

சைவத்தின் உயர்வைக்கண்டு [பி]டிப்பதற்காகச் செய்யப்[ப]ட்ட மூன்றாவது சோதனையில், [ச]ம்பந்தரால் எழுதி விடப்பட்ட [ஏ]டு தண்ணீரைக் கிழித்துக் [கொ]ண்டு எதிர்நோக்கிச்சென்ற [எ]ன்பதன் ஆராய்ச்சியின் [தொ]டர்ச்சியாக இக்கட்டுரை [எ]ழுதப்படுகின்றது.

சம்பந்தரால் விடப்பட்டஏடு, [எ]ங்கும் நிற்காமல், யாதொரு [எ]ங்கு தடையுமின்றி வைகை [ஆ]ற்றில், எதிர்நோக்கிச்சென்று [கொ]ண்டிருந்ததாம். அங்ஙனம் [செ]ல்கின்ற ஏட்டை எடுத்து [வ]ருவதற்காக குலச்சிறை என்ற [அ]மைச்சர் குதிரைமீதுஇவர்ந்து [செ]ன்றாராம். தண்ணீரை எதிர்த்[து]ச் செல்கின்ற ஏட்டை நிறு[த்]துவதற்காகச் சம்பந்தர்,"வன்[னி]யும் மத்தமும்" என்ற தேவா[ர]த்தைப் பாடினாராம். பன்னி[ர]ண்டு கல்தொலைவு தண்ணீரை [எ]திர்த்துச் சென்ற ஏடு, தேவா[ர]த்தைச் செவிமடுத்தவுடன், நீர் [ந]டுவிலே தேங்கி நின்று விட்ட[த]ாம். ஏட்டை எடுக்கச் சென்ற [கு]லச்சிறை, நீரிலே இறங்கி, [ஏ]ட்டை எடுத்துக் கரை ஏறி, [அ]தனை மதுரைக்கு எடுத்துச் [செ]ன்று அனைவருக்கும் காண்பித்தாராம் என்று சொல்லப் படும் இவ்வியத்தகு நிகழ்ச்சிகளையும் ஒருசிறிது ஆராய்வோம்.

ஆற்றிலிடப்பட்ட ஒரு ஓலைத் துண்டு (ஏடு) தண்ணீரை எதிர்த்துச் சென்றதென்பதற்கு, முன் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ள,'மணலைக்கயிறுகத்திரித்து' என்ற மேற்கோளை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இனித், தண்ணீரை எதிர்த்துச்சென்ற ஏட்டை எடுத்துவரக், குலச்சிறை குதிரைமீது இவர்ந்து சென்றாராம். ஏனோ நடந்து செல்லவில்லை! குதிரைமீது ஏறி விரைவாகச் 'சென்றாலன்றித், தண்ணீரைக் கிழித்துக்கொண்டு எதிர் நோக்கி 'விரைந்து' செல்லும் ஏட்டை எடுக்க முடியாதென்று கருதிக் குதிரை ஏறினாரோ? அல்லது ஒரு அரசனுக்கு அமைச்சனாக இருப்பவன் குதிரை மீதன்றி நடந்து செல்வது அவனுடைய மதிப்பைக் குறைத்து விடுமென்று கருதி அங்ஙனம் செய்யப்பட்டதோ, என்னவோ? அது குறித்த ஆராய்ச்சி நமக்கேன்? என்றாலும், மணலைக் கயிறுகத் திரிக்க எண்ணியவன், தண்ணீரை மணலாக்கி, அம்மணல் கொண்டு கயிறு திரித்தான் என்பது போல் தண்ணீரை எதிர்த்துச் சென்ற ஏட்டை எடுத்து வர, மணிக்கு நூற்றைம்பது கல் வேகம் செல்லும் இயல்பினைப் பெற்ற புரவியை ஊர்ந்து கொண்டு சென்றாராம் என்ற புதுமையினை எடுத்துக் காட்டுவதற்காகவாவது அந்நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

இனிக் குலச்சிறையார் குதிரை ஏறிச் சென்றது, அவர் தம்முடைய அமைச்சர் பதவிக்கு ஏற்ப அவ்வாறு செல்வதையே மதிப்பிற்குரிய காரியமாக நினைத்து, அங்ஙனம் குதிரை மீது ஏறிச்சென்றவரல்ல வென்பதும் 'உண்மையாகவே' ஏடு மிகவும் விரைவாக எதிர் நோக்கிச்சென்றதால், குதிரை மீது சென்றாலன்றி, அதனைக்கண்டு பிடிக்க முடியாதென்று கருதியே அங்ஙனம் சென்றார் என்பதும் சேக்கிழார் கூறுவதிலிருந்து பெறப் படுகின்றது. எப்படி யென்றால், ஏட்டைக்கண்டு பிடிப்பதற்காகக் குலச்சிறை,

"காற்றினுங் கடுகச் செல்லுங்
கடும்பரி ஏறிக்கொண்டு"

சென்றார் என்று சேக்கிழாரே கூறியுள்ளார். எனவே, சம்பந்தரால் விடப்பட்ட ஏடு, எந்த அளவு வேகத்தில் சென்றிருக்க வேண்டுமென்பதை எண்ணும்

போது, சைவத்தின் உயர்வுக்கு இன்னும் எவ்வளவோ சான்று வேண்டிக்கிடக்கிறது என்றே தோன்றும்!

இனி, எதிர் நோக்கிச்சென்ற ஏட்டை நிறுத்தச் சம்பந்தர் எடுத்துக்கொண்ட முயற்சி—முறை என்னப்பட்டது? ஒரே ஒரு பாடல்! தண்ணீரைக் கிழித்துக்கொண்டு மிகவிரைவாகச் சென்ற ஏடு, அந்தப் பாடலைச் செவியுற்றதும் உடனே நின்றுவிட்டது! என்னே கிருபை? திருவேடகம் என்னும் ஊருக்குப் பக்கத்தின் நதித்தண்ணீரில்! எப்படி நின்றது? மேலும் எதிர் நோக்கிச் செல்லாது தேங்கி நின்றது! சைவத்தின் உயர்வை அளவிட்டறிய இதைவிட வேறென்ன மேற்கோள்வேண்டும்! ஒரு பாடலுக்கு ஏடு எதிர் நோக்கிச் சென்றது! இன்னொரு பாடலுக்கு அப்படியே தேங்கி நின்றது! மற்றொரு பாடலுக்கு அது வான்வெளியில் பறந்து கூடச் செல்லும்? ஆனால், எதிர் நோக்கிச் சென்ற ஏட்டை எடுத்து வருவதற்கு மட்டும் குலச்சிறையார் குதிரை ஏறிச் செல்லவேண்டியிருந்தது. எதிர் நோக்கிச் செல்வதற்கும், நீர் நடுவே தேங்கி நிற்பதற்கும் பாடிய சம்பந்தரால், அந்த ஏட்டை, 'நீ சென்றதுபோதும், திரும்பிவா" என்று பாடமுடியாமல் போயிற்று. அப்படிச் செய்வது ஒருகால் சைவத்தின் உயர்வுக்குத் தாழ்வு செய்வதாக ஏற்பட்டு விடுமோ? அல்லது ஏடுதிருப்பிவர மறந்துவிடுமோ? பாட்டால் ஏட்டைத் திருப்பி வரச் செய்தால், அதனைச் சமணர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்களோ? ஏன் அவ்வாறு செய்யப்படாமல், குலச்சிறையைக் குதிரைமீது அனுப்பி ஏட்டை எடுத்து வரும்படி செய்யப்பட்டது? விளக்கம் வேண்டும்.

சேக்கிழார் அன்பர்களின் சிவநெறிச் சிந்தனையை நாம் காரணமின்றிக் கிளறுவதாக எண்ணிச் சினங் கொள்ளாமல், அன்பு கூர்ந்து விளக்கவுரை விளம்ப வேண்டுகின்றேன்.

இன்னும், சம்பந்தரால் எதிர் நோக்கிச் செல்லும்படி விடப்பட்ட ஏடு, நடுஆற்றிலே தேங்கி நின்றதைக் குலச்சிறையின் கண்கள் கண்டன என்று கூறப்படுகின்றது. நடு ஆற்றிலே, தண்ணீரிலே தேங்கிக் கிடந்த ஏட்டைக் கரையிலே நின்ற குலச்சிறை கண்டார் என்பதை எப்படி நம்ப முடியும்? ஆற்றின் நடுவிலே தண்ணீரில் கிடந்த ஒரு சிறு ஓலைத் துண்டு, கரையில் நின்ற ஒருவனுடைய கண்களுக்குப் புலப்பட்டதென்பது, உண்மையிலேயே வியக்கக்கூடிய ஒரு செயலேயாகும். ஒருகால், அந்த வைகையாறு, கரையில் நின்று பார்ப்பவர்களுக்கு, அதிலுள்ள பொருள்கள் எல்லாம் தெரியக் கூடிய அளவுக்கு அகலக் குறைவாக இருந்தது; அதனால், குலச்சிறைக்கு நடு ஆற்றில் இருந்த ஏடு தெரிந்தது என்று கொள்வதற்கும் இல்லையே! சேக்கிழாரால் குறிப்பிடப்படும் திருவேடகம் என்னும் ஊரிலுள்ள கோயிலுக்குப் பக்கத்தில், வைகையாறு, மற்ற இடங்களைப் பார்க்கிலும் அதிக அகலமாகவே உள்ளது என்ற உண்மை, திருவேடகத்திற்கு நேரில் சென்று பார்ப்பவர்களுக்கு நன்கு புலப்படும். அங்குள்ள ஆற்றின் அகலம், அதன் நடுவில், தண்ணீரில் கிடக்கும் ஓலை போன்ற சிறு பொருள்களைக் கரையில் நிற்பவர்களால் கண்டறிய முடியாத அளவுக்கு விரிந்து பரந்துள்ளது. திருவேடகத்தில், வைகையாற்றின் அகலம் ஏறக்குறைய கால்கல் தொலைவிருக்கும். எனவே, அரைக்கால்கல் தொலைவில், அதாவது நடு ஆற்றில், தண்ணீரில் கிடக்கும் ஒரு சிறு ஓலைத் துண்டைக் கரையில் நின்ற குலச்சிறை தம் கண்களால் கண்டார் என்பது, கருத்துக் குருடர்களாலன்றி மற்ற எவராலும் நம்ப முடியாத ஒரு முழுப் பொய்யேயாகும்.

இனி, வைகையாற்றிலுள்ள தண்ணீர், தன்னிடத்துள்ள எந்தப் பொருளையும் பார்ப்பவர் கண்களுக்கு எளிதில் புலப்படும் முறையில் மிகவும் தெளிவாகக் கண்ணாடி போன்றிருந்தது; அதனாலே, குலச்சிறையின் கண்களுக்கு அந்த ஏடு எளிதில் புலப்பட்டது என்று கொள்வதற்கும் இல்லையே! வைகையாறு, ஏனை ஆறுகளைப்போல் எந்தக் காலத்திலும் நீரோட்டத்தோடு இருப்பதில்லை. வைகையாற்றில் தண்ணீர் காண வேண்டுமானால், அதனைத் தோண்ட வேண்டும், அல்லது மழை பெய்ய வேண்டும். இவ்விரண்டும் இல்லையேல், வைகையில் தண்ணீரும் இல்லை. மழை இல்லாத காலத்தில், வைகையில் தண்ணீர் காண வேண்டுமானால், கை வைக்க வேண்டும்; அதாவது தோண்ட வேண்டும். இப்படித் தோண்டித் தண்ணீர் காண்பதனால்தான், அந்த ஆற்றுக்கு வைகை என்ற பெயர் ஏற்பட்டதாம். வை—கை. அதாவது கையை வைத்தால்—தோண்டினால் தண்ணீர் கிடைக்கும். மற்ற ஆறுகளில், மழை இல்லாத காலத்தில், தோண்டினாலும் தண்ணீர் எளிதில் கிடைப்பதில்லை. ஆனால், வைகையாற்றில் மட்டும், பல ஆண்டுகள் மழை இல்லாவிட்டாலும், ஓரடி இரண்டடி பள்ளம் தோண்டினால்போதும், உடனே தண்ணீரைக் காண முடியும். வைகையாறு ஓடும் பகுதியில், நிலத்துக்குள் இருக்கும் நீரோட்-

(11-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ாஞ்சி] 22—12—46 [ஞாயிறு


## அந்தக் கரம்

★

"அதோ வெகுதூரத்தில் அந்த திக்குப்பின்னால், அந்த மலைகளுக் கும் காடுகளுக்கும் அப்பால் நமது புண்யபூமி கிடக்கிறது. நாம்உதித்த னைல். நாம் திரும்பவும் சென் டையப்போகும் நிலம். உற்றுக் கேள்! இந்தியா அழைக்கிறது. நம் ாட்டு நாற்பது கோடிமக்கள் அழைக்கின்றனர். இரத்தம் இரத்தத் தைக்கூப்பிடுகிறது. எழுங்கள்வீண் பொழுது போக்க இது நேரமன்று. உங்கள் ஆயுதங்களை எடுங்கள்! அதோ உங்கள் முன்னால் நம் முன் னோர்கள் கட்டிய பாதை இருக்கி து. அந்தப்பாதை வழியாக நாம் அணி வகுத்துச் செல்வோம். எதி ப் படைகளின் நடுவேநாம்ஊடு விச்செல்வோம்.

நமது கடைசீத்துளியில் நமது ாணுவத்தை டில்லிக்குக்கொண்டு செல்லும் பாதையை முத்தமிடு வோம். டில்லிசெல்லும் பாதையே ுதந்திரப் பாதை. சலோ டில்லி!"

வங்கச்சிங்கம், சுபாஷ் சந்திர போசின் வீரஉரை இது. தேசிய ாணுவம் என்று அழைக்கப் படும் I. N .A. அமைத்த காலை அவராற்றிய ஆற்றலுரை—அனை வருக்கும் அந்த அழைப்பை அனுப்பினர்—தமிழரே ஏராளம் அந்த விடுதலைப்படையில்.

அவர் அமைத்த விடுதலைப் படை வெற்றி பெற்று, எந்த டில்லியில் பவனி வரவேண்டு மென்று விரும்பினரோ, எந்த டில்லியைக்காண அவரும்அவர் அமைத்த படையினரும் 'இரத்த ஸ்நானம்' செய்தனரோ, அதே டில்லியிலே, நடைபெறுகிறது, அரசியல் நிர்ணயசபை. ஆனல் சுபாஷின் இன்பக்கனவு நன வாகி இருந்திருப்பின், இது போன்று நடைபெற்றிருக்குமா! சபையிலே ஒரு பகுதியில் ஆட் களில்லை. சமஸ்தானதிபதிகள் சலசலப்பு மற்றோர்புறம். வெள் ளையரின் ராஜதந்திராயுத வீச்சு வேறோர்புறம். தொகுதியா, கூட்டா? கட்டாயத்தொகுதியா என்ற விவாதம் ஓர்புறம்! அ. நி. சபை, வீரர்களின் அறிவிப்புக்கு இடமளிக்குமிடமாக இருக்க வில்லை—வக்கீல்களின் சங்கமாகி விட்டது! ஏன்? பிரிட்டிஷார் வகுத்ததிட்டம், அப்படிப்பட் டது. எழுத்துக்கெழுத்து, சச் சரவு மூட்டக்கூடிய விதமாக; சட்டச்சிக்கல், வியாக்கானச் சிக்கல் கொண்டதாகத் திட்டம் தீட்டி, அதிர்ப்திநிறையவளர்ந்த பிறகு, அதனைத்தந்தனர். இன்று அ. நி. சபையிலே தெரிகிறது. வெள்ளைக்காரனிடம் "குண்டு" மட்டுமல்ல இருக்கும் ஆயுதம் என்று. ஒருதிட்டம், ஒருபட்டா ளத்தால்கூடச்சாதிக்கமுடியாத காரியத்தைச் செய்துவிடுகிறது- நாட்டுவிடுதலை முயற்சியைக் கெடுத்து வருகிறது.

திட்டத்திலே ஒருபகுதியைக் காட்டி, 'ஐயா! இதற்கென்ன பொருள்?" என்றுகேட்கவேண் டிய நிலையை, ஏன் பிரிட்டிஷார் உண்டாக்கவேண்டும். தெளி வான, சந்தேகத்துக்கு இடமே யில்லாத, சாப்ரூ ஜெயகர் தேவைப்படாத, சட்டச் சருக் கலில்லாத பதங்கள் இல்லையா? ஏன், திட்டத்திலே, பாவனைக்கு ஏற்றபடி பொருள் கொள்ளக் கூடிய பதங்கள் உள்ளன? நமக் குள், விவகாரம் முற்றுவதற்குத் தான்! இல்லையானல், எங்கா வது கேள்விப்பட்டதுண்டா, திட்டத்திலே ஒருபகுதிக்கு, தீட் டியவர் ஒரு அர்த்தம் சொல்லி விட்டு, வேண்டுமானல், கோர்ட் டுக்குப்போ, என்று பேசியதை! மத்யஸ்தம், சமரசம், என்று எந் தப்பெயரிட்டாலும் சரியே, மத் யஸ்தாரகவே பார்த்து, நான் இதற்கு இப்படிப்பொருள்கூறு கிறேன், வேண்டுமானல்கோர்ட் டுக்கும் போய்க்கேள் என்று சொல்லலாமா? நமது ஓட்டல் சாப்பாடு வெகு நேர்த்தி—அரிசி முதல்தரம் — சமயல் முறையும் மேலானது—எதற்கும் அடுத்த வீதியிலே டாக்டர் இருக்கிறர் அவரிடமும் சென்று, மருந்து பெற்றுக்கொள்ளுங்கள் இஷ்டப் பட்டால் என்று கூறுபவரை, என்ன என்றுகூறுவோம். பிரிட் டிஷார் பேச்சு இதைவிடமோச மான விபரீதப்போக்கில் இருக் கிறது. 'வேண்டுமானல்கோர்ட் டுக்குப்போ! ஆனல் கோர்ட்டா ரின் முடிவுக்குக் கட்டுப்படமுடி யாது. நான் கூறும் பொருளின் படித்தான் காரியம் நடைபெற வேண்டும்" என்றும் கூறுகி ருர்கள்.

விடுதலை விரும்புபவர்களைவிளை யாட்டுப்பிள்ளைகளாக்க விரும்பு கிருர்கள். ஏன்? அவர்கள் நன்கு அறிந்து கொண்டுவிட்டார்கள், இங்கே, இனங்களுக்குள், அவ நம்பிக்கையும், மாச்சரியமும் வளர்ந்துவிட்டதை.எனவேதான் வெளிப்படையாகவே பேசவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

வேலைக்கேற்றபடி, ஆளுக் கேற்றபடி, பேசுவதும், சமயத் துக்குத்தக்க 'ரூபம்' எடுப்பதும் பிரிட்டிஷாரின் பிறவிக் குணம் என்றலும், இம்முறை அவர்கள் தங்கள் திறமையின் உச்சஸ்தா னத்தை அடைந்துவிட்டார்கள். அபாரமாக நடிக்கிறர்கள்! கிரிப் சுக்கு, வீரபாகம்—பெதிக்லாரன் சுக்கு சோகபாகம் — சர்ச்சி

ஒரு கோப பாகம்— இப்படி அவர்களுக்குள் வேஷங்களை அமைத்துக்கொண்டு, நாடகம் நடத்துகிறார்கள்.

இந்தியா ஒரே ஆட்சியில் இருக்கவேண்டும் — இது காங்கிரஸ் கேட்டது.

இந்தியாவில் இரு ராஜ்யங்கள் —இது லீக் கேட்டது.

லீக் தனது பிரசாரபலத்தை அதிகப்படுத்தும் வகையில் பிரிட்டிஷார், செய்துவந்த தந்திரம், இந்தியா ஒருநாடு-அதைப்பிரிக்கலாமா? என்று உரக்கமாகப் பேசியதுதான். அமெரியின் அந்த நாள் வாசகத்தை நினைவில்கொள்வோர் இதனை அறிவர். இந்தியா முதலில் (INDIA FIRST) என்று இந்தியாவை அடிமை கொண்ட ஏகாதிபத்யத்தின் ஏவலர், 'தேசியம்' பேசிய காலம் அது. என்ன அதன் பொருள்? ஏன் அந்தப் போக்கு கொண்டனர்? காங்கிரசுக்கு ஒரு கோபம் கருப்பஞ்சாறு! காங்கிரசுக்கு [illegible] வேண்டும் என்ற [illegible] அதை [illegible] இருக்கும் அந்தச் ரோஷம் — கோபம் வரவேண்டும் என்று. லீக் பல மாதமும், பிரிட்டிஷார் 'இந்தியா ஒன்றுதான் என்றாலும்'.......... என்று இழுத்துப்பேசினர். காங்கிரஸ்—லீக் பேதம் வளர வளர, பிரிட்டிஷாரின் பேச்சிலேயேயும் பேதம் [illegible] யிற்று.

"சுதந்திர தேவை! அன்புமிக்க இந்தியப் பெருங்குடி மக்களே! அதனைத்தரவே நாடுகிறேன், பெற்றுக்கொள்க!" என்று கவிதை பொழியலாயினர். ஜாலியன்வாலா நடத்தியவரின் வாயிலிருந்து இந்த அன்புரை வரக் காரணம் என்ன? பேதம், உன் நாட்டிலே வளருகிறது எனவே நான் சுதந்திரம் தருவதாகச் சொல்வது, சச்சரவை அதிகப்படுத்திவிடும், அந்தச் சச்சரவையேபிறகுநமக்குச் சாதகமாக்கிக்கொள்ளலாம், என்ற தந்திரப்போக்கு அது.

பாகிஸ்தான் கேட்டனர் முஸ்லிம்லீகினர்.

பாகிஸ்தானா, அது கூடாதே, என்றது ஏகாதிபத்யம். கூடாது அல்ல கூடாதே! அதாவது, தர முடியாது என்று உறுதியாகக் கூறவில்லை—அது ஏன், என்று உருக்கமாக உரைத்தனர். திட்டத்தின்படியே, இந்திய உபகண்டத்தை A. B. C. என்ற மூன்று பிரிவுகள்கொண்டதாக்கினர். கேட்டது ஒரு பாகிஸ்தான்—அதை மறுத்துவிட்டு, பாகிஸ்தானைப் பாகிஸ்தான் செய்தனர்! இந்தியாவை, இந்துஸ்தான் பாகிஸ்தான் என்று பிரித்திருக்கலாம்—அந்தப் பாகிஸ்தானில், எல்லை எப்படி இருக்கவேண்டும், எந்தெந்த மாகாணம் இருக்கவேண்டும் என்ற விவாதத்தை விளக்கியிருக்கலாம்—அப்போது அதிலே ஆசாம் இருக்கமுடியுமா, கூடாதா, என்ற பிரச்னைகளைத் தெளிவாக்கி இருக்கமுடியும். "இதிலிருந்து இதுவரை" என்று லீக் கேட்க, வேண்டாம், இதிலே இருந்து இதுவரையிலேதான் பாகிஸ்தானாக இருக்கவேண்டும் என்று சமரசக் கமிட்டி கூறியிருக்கலாம். இந்நேரம் பிரச்னை தீர்ந்துபோயிருக்கும்.

லீகினரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்துவிட்டதாகக் காங்கிரஸ் கருதவேண்டும்—காங்கிரசின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ததாக லீக் எண்ணிக்கொள்ள வேண்டும்—இப்படித் தவறான எண்ணம், மாறிமாறி இருகட்சிகளுக்கு மிடையிலே ஏற்பட்டபடி இருக்கவேண்டும், இதனைச் சாக்காகக் கொண்டு, சர்வவல்லமை உள்ள சாம்ராஜ்யம் என்ற பெயருக்கேற்ற சக்தி போய்விட்ட இந்த நாட்களிலும், சாம்ராஜ்யாதிபதியாக வாழவேண்டும். இது பிரிட்டிஷ் நோக்கம். இதற்கே நாடகம்.

எனவேதான், இந்த அமைப்பை, அடிமை நிர்ணயசபை என்று அழைத்தோம்.

பண்டித நேரு, வீர உரையாற்றினார், அ. நி. சபையில். வெள்ளையன் காதிலே விழவேண்டிய பேச்சுத்தான். ஆனால் அவரையும் என்ன பாடுபடுத்திவைக்கிறது பாருங்கள் ஏகாதிபத்யம். அ. நி. சபையிலே அதிதீவிரமாகப் பேசிய அதே நேருவை, கல்கத்தா வெள்ளை வர்த்தகர் சங்க விழாவுக்கு அழைத்தனர் பேச. அங்கு சென்ற நேரு, பழைய பல விஷயத்தை மறந்து பிரிட்டனுடன் நேசமாகவே வாழ நாங்கள் விரும்புகிறோம் என்று பேசவேண்டி நேரிட்டது. அ. நி. சபையிலே, அவர், தேச விடுதலை வீரர் மொழி பேசினார். வெள்ளையர் மத்தியில், குழைவு மொழி பேசலானார். இவ்வண்ணம் ஒரு தனி மனிதரை மட்டுமல்ல, பலரை மட்டுமல்ல, கட்சிகளையே தன் இஷ்டப்படி ஆடச் செய்கிறது, ஏகாதிபத்யம்.

சுதந்திர இந்தியக் குடிஅரசுத் தீர்மானத்தைப் பண்டித நேரு பிரேரேபித்திருக்கிறார். அதனை இப்போது நிறைவேற்ற வேண்டாம், லீகும், சமஸ்தானாதிபதிகளின் சார்பில் வருவோரும் கலந்துகொள்ளட்டும், பிறகு நிறைவேற்றுவோம், என்று டாக்டர் ஜெயகர் கூறுகிறார். அது பற்றிய விவாதமும், விளக்கமும், மறுப்புரைகளும், எழுச்சிப்பேச்சும், எல்லாம் சேர்ந்து, உலகுக்கு எதை அடுத்துக் காட்டுகிறது என்று கூர்ந்து கவனித்தால், சுதந்திரம் கோரும் இந்தியாவில்

பலமான கருத்து வேற்றுமை இருக்கிறது என்பதைத்தான்.

இந்த மகத்தான தீர்மானம், அரை நூற்றாண்டாக, எந்த இலட்சியத்துக்காக, ஆயிரமாயிரம் இளைஞர்கள் தியாகத் தீயிலே குளித்தனரோ, அந்த இலட்சியத்தை அடைவதற்கான தீர்மானமாகும். இது பற்றி விவாதம் நடக்கும்போது, நமக்குள் இருக்கும் உட்பகையைக் கண்டு, வெள்ளைக்காரன், கடலுக்கு அப்புறமிருந்து கேலி செய்யும் காட்சியைக் காண்கிறோம். இதுவே இன்று, உண்மை நிலையுணர்வோரின் உள்ளத்தை வாட்டுவது.

அ. நி. சபையிலே, லீகினர் கலந்துகொள்ள வேண்டாம் என்று ஜனாப் ஜின்னா கூறிவிட்டார்.

இதிலே கலந்துகொள்ளாவிட்டாலும், தொகுதி பற்றிக் கூடும் சபைகளில், B, C, சபைகளில், லீகினர் கலந்துகொள்வர், என்றும், அந்த இரு தொகுதிகளைப் பற்றிய திட்டங்களை அவர்கள் தயாரிப்பர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கோர் புதுச் சிக்கல் உண்டாகிவிட்டது.

அசாம் மாகாணக் காங்கிரஸ் தலைவருக்குக் காந்தியார் ஒரு யோசனை கூறிவிட்டார். வங்காளமும் அசாமும் சேர்ந்தது C. தொகுதி. இதிலே இருக்க இஷ்டமில்லை என்று அசாம் கூறுகிறது. அப்படியானால், C. தொகுதிக்கான சபை நடைபெறும்போது நீங்கள் கலந்துகொள்ளாதீர்கள் என்று அறிவித்துவிட்டார்.

மொத்தமாக அ. நி. சபை கூடிறபோது லீகினர் கலந்துகொள்ளவில்லை.

தொகுதிகள் பற்றிய சபை கூட்டங்களிலே, காங்கிரஸ் கலந்துகொள்ளவில்லை.

இப்படி ஒரு நிலைமை வளர வழி உண்டாகிவிட்டது.

மெஜாரடி பலத்தைக்கொண்டு முஸ்லீம்கள் விரும்பாத அரசியலைத் திணிப்பதற்காகவே இந்த அ. நி. சபை. இதிலே நாங்கள் கலந்துகொள்ள மாட்டோம் என்று லீகினர் கூறுகின்றனர்.

B. C. தொகுதிகளிலே, முஸ்லீம் லீகினரே மெஜாரடி. அந்த மெஜாரடி பலத்தைக் கொண்டு, அந்தத் தொகுதிகளில் சேர விரும்பாத எங்களைக் கட்டாயமாகச் சேர்க்க விரும்புகிறார்கள் —எனவே நாங்கள் அந்தத் தொகுதி சபைகளிலே கலந்துகொள்ளமாட்டோம் என்று அசாம், எல்லை, எனும் இரண்டு மாகாணக் காங்கிரஸ் தலைவர்களும் கூறுகின்றனர்.

மொத்த இந்தியாவில் சேர்த்துவிடாமல், தனி அரசாக, எல்லை, பஞ்சாப், சிந்து, வங்காளம், அசாம். ஆகிய ஐந்து மாகாணங்களைப் பாகிஸ்தான் ஆக்கவேண்டும் என்று லீக் கோருகிறது.

பிரிட்டிஷார், இந்த ஐந்தை, இரண்டு பிரிவாக்கினர். எல்லை, பஞ்சாப், சிந்து ஒரு தொகுதி. அசாம், வங்காளம், மற்றோர் தொகுதி என்ற முறையில். இந்தத் தொகுதிகளில், மெஜாரடி பலம், லீகுக்கு. எனவே இதிலே கலக்கக் காங்கிரஸ் சார்பினர் விரும்பவில்லை. ஆக லீக் வராததால், அ. நி. சபை பூரண பிரதிநிதித்வம் வாய்ந்ததாகவில்லை; அசாம், எல்லை ஆகியவைகளிலே உள்ள காங்கிரசார் கலந்துகொள்ளாததால், தொகுதிகள் சபையும் பூரண பிரதிநிதித்வம் வாய்ந்ததில்லை.

இஷ்டப்படாத பகுதியினர் மீது திட்டத்தைத் திணிக்கமாட்டோம் என்று பிரிட்டிஷார் கூறுகின்றனர்!

ஏன், அ. நி. சபையினர் தயாரித்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவில்லை என்று காங்கிரஸ் கேட்டால், லீகினரின் ஆதிக்கத்திலுள்ள பகுதி ஏற்க மறுப்பதால், நாங்கள் அதனைத் திணிக்கவில்லை என்று பிரிட்டிஷார் சுலபமாகப் பதில் கூறுவர்.

ஏன், B. C. தொகுதிகளின் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவில்லை என்று லீக் கேட்டால், அசாம் ஏற்றுக்கொள்ளவில்லையே, எல்லை ஏற்றுக் கொள்ளவில்லையே என்று அதற்கும் சுலபமாகக் கூறிவிட முடியும்.

இந்த நிலையை நீடிக்க விடுவதா, என்பதே நமது கேள்வி.

ஒன்று தெளிவாகத் தெரிகிறது—டில்லி—சுபாஷ் பாபு காண விரும்பிய விதமாக இல்லை. ஆங்கில ஏகாதிபத்யம், எத்தகைய டில்லியைக் காண விரும்புகிறதோ, எவ்விதமான டில்லியைக் கிளைவ் கண்டு களித்தானோ, அதே டில்லிதான் தெரிகிறது. அதே குழப்பம்—அதேவிதமான ஒற்றுமைக்கேடு—அதேபோன்ற மாச்சரியம், எறக்குறையப் பிளாசி வாடை அடிக்கிறது.

"அழிந்துவிட்ட, இனி அழியப் போகும் சாம்ராஜ்யங்களின் சுடுகாடு டில்லி'' என்று கிருபளானி பேசினார். இடமும் அப்படிப் பட்டதுதான்! சூழ்நிலையும் அவ்விதமே இருக்கிறது. எனவே, இப்போது செய்யவேண்டியது, இந்தியா சுதந்திரக் குடி அரசு விரும்புகிறது, அக்குடி அரசுக்கான திட்டம் தயாரிக்க விரும்புகிறது — என்ற தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, சபையைக் கலைத்துவிட வேண்டும், அல்லது ஓராண்டு ஈராண்டு ஒத்திவைத்துவிட வேண்டும்; அந்த இடைக் காலத்தில், பிரிட்டிஷ் திட்டப்படி அல்ல, சகல கட்சியினரும்

கூடிக் கூடிப் பேசி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பேசி, வெளியான் கண்டு நகைக்கிறானே என்ற வெட்கக்கேட்டுக்குப் பயந்தாவது பேசி, மொத்தமாக ஏகாதிபத்யத்திடம் அடிமையாக இருப்பதை விட, நமக்குள்ளே ஒருவருக்கொருவர், கொஞ்சம் அதிகச் சலுகையோ, சலுகைக் குறைவோ, பெற்றுக்கொள்வதைப் பொருட்படுத்தாமல், ஒரு சமரசத்துக்கு வரவேண்டும்—அந்தச் சமரசம், சுய நிர்ணயத்தை — அதாவது இன அரசை— அடிப்படையில் கொண்டதாக அமையவேண்டும்— அந்த ஏற்பாட்டுக்கு ஒப்புதல் கிடைத்தவுடன், அ.நி. சபை உண்மையான உரிமைச் சபை கூட்டி, விடுதலை விழா கொண்டாட வேண்டும்.

இதற்கான சூழ்நிலையை உண்டாக்கிப் பணியாற்ற வேண்டும்.

இது பொது யோசனை. இதே பிரச்னையிலே, நமது பிரச்னை தொக்கிக் கிடக்கிறது. திராவிட கழகத்தாராகிய நாம் இந்த சபையிலேயோ, இதற்குத் திட்டம் தந்த மந்திராலோசனையிலேயோ கலந்து கொள்ளவுமில்லை—கலரிக்கப்படவுமில்லை—நாமும் கவனம் செலுத்தவுமில்லை. நமது கோரிக்கை, வடநாட்டுத் தொடர்பு கூடாது என்பது. A. B. C. எனும் தொகுதிகள் போதா. D. தொகுதி வேண்டும் என்பது. நமது நியாயத்துக்குக் குறையில்லை—வலிவு பெறவில்லை நாம். வலிவு பெற்றோர்களோ, ஏகாதிபத்ய வஞ்சனைச் சுழலில் படாத பாடுபடும்போது, வலிவு பெறாததாம் நமது நிலைக்காக வருத்தமோ வெட்கமோ படத்தேவையில்லை, நமது பலம், வளரும். அதிலே சந்தேகம், மாற்றார்களுக்கே இல்லை!

நாம் அழைக்கப்படவில்லை அ. நி. சபைக்கு. ஆனால், நமது நாட்டிலிருந்து, காங்கிரசாரால் அனுப்பப்பட்டிருக்கும் பிரதிநிதிகளைப் பற்றியும், அவர்களைத் தேர்ந்தெடுத்த முறை பற்றியும், கோபமும் அதிருப்தியும், வளர்ந்துவிட்டது—வளருகிறது—திராவிடர் கழகத்தவரல்லாத பலரிடையே.

குலபாசத்தைக் கவனித்தே அ. நி. சபைக்கு, சென்னைமாகாணக் காங்கிரசார் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர் இது கொடுமை, என்று கொதித்து எழுதிற்று "ஜனநாயகம்" என்ற பத்திரிகை. ஈரோட்டிலிருந்தல்ல, மலாய் நாட்டிலே இருந்து.

அரசியல் நிர்ணயசபைக்கு சென்னை சர்க்கார் பொறுக்கியிருக்கும் அங்கத்தினர்களைப் பார்த்து, நியாய புத்தியுள்ள எவரும் அதிருப்தி கொள்ளாமலிருக்க முடியாது. அங்கத்தினர்களைப் பொறுக்கி எடுக்கும் விஷயத்தில், தியாகத்தையும் தேச சேவையையும் அவ்வளவுதூரம் கவனியாது சட்ட மூளையும், நிர்வாகத் திறமையுமுள்ள நபர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அதோடு பல பிரிவுகளுக்கும் பிரதிநித்வமும் அளிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில்தான் மற்ற மாகாணங்களில் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால், சென்னையைப்பொறுத்த வரையில் வேறு மாதிரியாகத்தான் அமைந்திருக்கிறது. சில குறிப்பிட்ட தலைவர்களுக்கு அவர்களது செல்வாக்கை பொறுத்த விகிதாசாரம் அங்கத்தினர்கள் "கோட்டா" அளிக்கப்பட்டிருக்கிறது. தலைவர்களோ, தங்கள் தங்கள் பின்தாங்கிகளை பொறுக்கியிருக்கிறார்கள்.

அங்கத்தினர்கள் வரிசையிலே சர். என். கோபாலசுவாமி, சர். அல்லாடி கிருஷ்ணசுவாமி,
பொப்பிலி ராஜா, சர், எ. மு
த்தையா செட்டியார், இவர்க
நமது விசேஷ கவனத்திற்
ஆளாகிறார்கள். முதல் இருவரு
காங்கிரஸ் மேலிடத்தால் சிபார்
செய்யப்பட்டவர்கள். சட்ட
நிர்வாகம் நன்கு தெரிந்தவர்க
பின்னுள்ள இருவர்களும் செ
வந்தர்கள். ஜஸ்டிஸ் கட்சியை
சேர்ந்தவர்கள். தியாகம், தே
சேவை இவைகளில் நால்வரு
ஒரே பள்ளிப் பிள்ளைகள் தா
இந்நால்வருக்கும், அரசியல் நி
ணய சபையில் காங்கிரஸ் சிபா
சின் மீது இடங்கிடைத்தது எ
ருல், உலகப் பிரசித்தி பெற்
சர் ஏ. ராமசுவாமி முதலியா
சர் ஆர். கே. ஷண்முக
செட்டியார், என். சி
ராஜ் இவர்களுக்கும் ஏன் இட
அளித்திருக்க கூடாது என்ப
தான் தெரியவில்லை. பொப்பி
ராஜாவையும், முத்தையா செ
ட்டியாரையும் விட இவர்கள் எ
விதத்திலும் ஒதுக்கப்பட வே
டியவர்களல்லவே; ஒரு வே
இவர்கள் அரசியல் நிர்ண
சபைக்குள் வந்துவிட்டா
தென் இந்தியாவிலேயே "க
ளுக்குத்தான் மூளையுண்டு"
என்று டமாரம் அடித்துவரு
ஒரு கும்பலின் சாயம் வெளுத்
விடும் என்பதைத் தவிர இவ
களை ஒதுக்கப்படுவதற்கு வே
காரணமேயில்லை. இது நிய
யமா? சிந்தனை செய்து கொ
ளுங்கள்."

இது, நாகர் கோயிலிலிருந்
வெளிவரும் 'சுடர்' எனும் இ
ழிலிருப்பது. சுடர், "தேசிய
இதழ்தான்.

"இப்போது தமிழ்நாட்டின் ச
பாக அ. நி. சபையில் கலந்துகொ
டுள்ளவர்களின் தேசபக்திக்கு ந
மதிப்புக்கொடுக்கிறோம். ஆனால் அ
கள் தேசிய இந்தியாவின் சுதந்தி
உணர்ச்சிக்குப்பிரதிநிதிகளேயொழி
தமிழ் இனத்தவரின் தனிப்பட்ட வ

சியங்களுக்குப்பிரதிநிதிகளல்ல. ஏனெனில்தமிழ் நாட்டின் எல்லை, தமிழர்களின் அரசியல்பொருளாதார உரிமைகளைப்பற்றியஎந்தத்திட்டத்தின்மீதும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்லர். ஏகாதிபத்யத்தின் ஆக்கிரமிப்பில் இந்தியா இருக்கும்வரை தனி இனத்தின் நலன்களைப்பற்றிப் பேசுவது பாவமென்று சொல்லப்பட்டது. எனவே தமிழ்நாட்டுப்பிரதிநிதிகள் தாங்கள் ஓர் தனி இனத்தின் பிரதிநிதிகள் என்ற எண்ணத்துடன்-சுயமாகச்சிந்தித்துச் சுதந்தரமாக நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது,"

இது, 'தமிழ்முரசு' ஆசிரியர் தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் கருத்து.

"தமிழ்நாட்டுப் பிரதி நிதிகளே! உங்கள் இனத்தின் உரிமையைப் பறிகொடுக்காதீர்கள்!" இதுவும் அவர்.

"இந்தியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து ஏகாதிபத்யத்தை வெளியேற்றத் திட்டமிடுவதோடு இந்த சபையின் ஆயுளை முடித்துவிட முயலுங்கள்." அவர் உரைதான். நாமும் அதனை ஆதரிக்கிறோம், ஒருதிருத்தத்துடன் — சுதந்திர பிரகடனத்திலே, சர். கோபாலசாமி, சர். அல்லாடி, ராஜா பொப்லி, குமாரராஜா, போன்ற கையொப்பங்களல்லவா இருக்கும் இன்றைய நிலையில், இதிலே இவர்களா கையொப்பமிட வேண்டியவர்கள்? சர்க்காரின் முறிச்சீட்டிலே கையொப்பமிட்டுக் கரையேறிய கரத்தைப் பிடித்துக் குலுக்குகிறீர்களே, பெரியாரின் கரம், வேண்டாமா? — அந்தக்கரம், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று மணிமொழிகளைப்பொறித்த கரமல்லவா, அவருடைய கையொப்பத்தைப் பெற வேண்டுமென்று நண்பர் சிவஞானம், தமது உரையில் ஒரு திருத்தம் செய்துகொள்ளவேண்டும்.

அந்தக்கரம், வெள்ளைக்காரன் "விஷ்ணு அம்சம்" என்று எழுதினதில்லை.

அந்தக்கரம், ராஜவிஸ்வாசப் பத்திரத்திலே ஒப்பம் எழுதினதில்லை.

அந்தக்கரம், சர்க்காரிடம் பெற்றுக்கொண்ட மாதச்சம்பளம் ரூபா 6000 என்று எழுதினதில்லை.

அந்தக்கரம், சுதேசமன்னர்களுக்கு ஸ்ரீமுகம் அனுப்பினதில்லை. பட்டம் பதவிப்பத்திரங்களிலே அந்தக்கரம் பட்டதில்லை. அடிக்கடி, சிறைச்சாலை ரிஜிஸ்டரில் பட்டகரம்! அது பிடிக்கவில்லை, ஆனால் காலமெல்லாம், ஏகாதிபத்யத்தின் காலைவருடிக் கொண்டிருந்த கரம், பிடிக்கிறதே! இதனை எப்படி நாங்கள் மறக்கமுடியும். சுபாஷின்போக்குக்கும், தமிழ்நாட்டுக் காங்கிரசை நடத்திச் செல்வோர், அவர்களை நடத்திச் செல்லும் வடநாட்டுத் தலைவர்கள் ஆகியோரின் போக்குக்கும் உள்ள மகத்தான, மனதை வாட்டக் கூடிய வித்யாசத்தைக் காண வேண்டுகிறோம். விடுதலைப்படை அமைத்த அந்த வீரன், விரும்பி வரவேற்றார், வெறும் காங்கிரஸ்காரர்களை மட்டுமல்ல, தமிழகத்திலிருந்து மலாய் சென்றுவாழ்ந்திருந்த, சகலரின் கரத்தையும் பிடித்துக் குலுக்கினர். எனவேதான் இன்று அனைவரின் உள்ளத்திலும் அவர் குடிகொள்ளமுடிந்தது. இங்கோ, காட்டிக்கொடுத்தவரின் கரத்தைக் குலுக்கவும், கனபாடிகளின் கரத்தைக்குலுக்கவும், மனம் இருந்ததே ஒழிய, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் போராடிய பெரியாரின் கரத்தைப்பிடித்து தோழமை கொள்ள மனமில்லை. ஆக, அந்த வகையிலே, அ. நி. சபை, தக்கவரை மதிக்கத்தவறிய குற்றத்துக்கு உள்ளாகிறது. அதைக் கூறவில்லை, நண்பர். இன்று. இன்னமும். நாளை கூறக்கூடும். இன்று மனதில் எண்ணத்தான் செய்வார். தமிழ் வளம்வளரும். அதிலே நமக்குத் தளராத நம்பிக்கை உண்டு.

நாம் குறிப்பிடும் அந்தக்காரணத்தைக் காட்டாவிட்டாலும் வேறு காரணத்தை, அதாவது இன்று தமிழ்நாட்டின் சார்பிலே, அ. நி. சபைக்குப் போயிருப்பவர்கள், உண்மைத் தமிழ்இனத்தின் பிரதிநிதிகள் அல்ல, என்று கூறி, இன்றைய அ. நி. சபையின் ஆயுள் விரைவில் முடிய வேண்டும் என்று உருக்கமாகக் கேட்டுக் கொள்கிறார் நண்பர் சிவஞானம்.

"உங்களுடன் சிறை புகுந்து சிப்பியேந்திச் சீரழிந்த ஒருவன் என்ற முறையில் சிரமேற்கரங் கூப்பி நான் செய்யும் வேண்டுகோள் இது" என்று நண்பர் எழுதுகிறார்."

அந்த வாசகம், காங்கிரஸ்தலைவர்களின் இதயத்தைத் தொடுகிறதா என்று பிறகு பார்ப்போம்.

அவர் சொன்னது அது. இதோ வேறோர் குழுவின் கொதிப்பைக் காணுங்கள்.

"அ. நி. சபைக்கு, இந்த மாகாணத்திலிருந்து 49 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பிரிட்டிஷ் மந்திரிகளின் திட்டத்தின்படி, பத்து இலட்சம் மக்களுக்கு ஒருபிரதிநிதி என்ற அளவு முறை கூறப்பட்டது. அதன்படிப் பார்த்தால், வன்னிகுல க்ஷத்திரியர்களாகிய எமக்கு 5-ஸ்தானங்களாவது தரப்பட்டிருக்க வேண்டும்.

நாங்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ மோகம் கொண்டவர்களல்ல. என்றாலும், சமுதாயத்தில் திருப்தியும் ஒற்றுமையும் ஏற்படவேண்டுமானால், அவரவர்க்குஉரிய ஸ்தானம் தரப்படவேண்டும் என்பதற்காகவே இதைக் கூறுகிறோம்.

பின்னணியிலுள்ள சமூகத்தாருக்குப் பாதுகாப் பளிக்கப்படும் என்று தேர்தலின் போது காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையும், சின்னாட்களுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கையும், பேச்சளவிலிராது, செயலளவில் கொண்டுவரப்பட்டு, எமக்கு நீதி வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்''

இப்படி எழுதினர், வன்னிகுல க்ஷத்திரிய மக்கள் சார்பில். அவர்கள் 63 இலட்சம் பேர் உள்ளனர்.

ஆசிரியருக்கு எழுதியகடிதமல்ல—ஆளவந்தார்களுக்குஎழுதிய மகஜர்இது. முதலமைச்சர் பிரகாசம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர், ஆச்சாரியார், ஆகமூவருக்கும் அனுப்பப்பட்டமகஜர்.

யாரோ ஊர்பேர் தெரியாதவர்கள் அனுப்பிய மகஜரல்ல—காங்கிரஸ் காட்டிய பாதையிலே நடந்தறியாதாரின் மகஜரல்ல—தியாகத் தீயிலே நின்றவர்களின் மகஜர், ஆட்சி மன்றத்திலே அங்கம் பெற்றவர்களின் மகஜர் ஆறு ஆடவர், ஒரு அம்மையார் ஆகஏழு M. L. A. க்கள் அனுப்பிய மகஜர் இது.

சேலம் A. சுப்பிரமணியம் M. L. A.
V. கோவிந்தராஜநாயகர்M-L-A
V. பொன்னுசாமி M. L. A,
M. கன்னியப்பன் M. L. A.
அந்சலைஅம்மாள் M. L. A.
S. பரமானந்தன் M. L. A.
P. R. சீனுவாசபடையாச்சி M. L. A

இவ்வளவு M. L. A. க்கள்மகஜர் அனுப்பிச் சாதித்துக் கொள்ள முடியாத காரியத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளைகளாக இருந்த, சர். கோபாலசாமி போன்றார், மகஜர் போட்டல்ல, மனதால் நினைத்த மாத்திரத்திலே சாதித்துக்கொள்ள முடிந்தது!

சிறையிலே நண்பர் சிவஞானமும் சேலம் சுப்பிரமணியமும் சிப்பியேந்திச் சிரமப்பட்டபோது சர். கோபாலசாமி எங்கே. என்ன செய்து கொண்டிருந்தார்? காஷ்மீரில் திவான் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்! இன்று அவரும், அவர் இனத்தவர் பலரும் அ. நி. சபையிலே இருக்கிறார்கள், இங்கே M. L. A. க்கள் மகஜர் அனுப்புகிறார்கள், அதுவும் பலனளிக்கவில்லை.

ஆக, இந்தசபை, ஒன்றுபட்ட மனம், சமரசமணம், இவற்றினைக் கொண்டதுமல்ல. நீதிக்கும் நேர்மைக்கும் மதிப்பு, தியாகத்திற்கு மதிப்பு, மக்களின் உரிமை முறைக்கு இடம், தரப்பட்ட இடமுமல்ல. ஆகவேதான் இதன் ஆயுளை விரைவில் முடியுங்கள் என்கிறார் நண்பர். அவசியமான காரியம். ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு இறுதி அறிவிப்பு தெரிவித்து விட்டுச்சபை கலையட்டும்—பிறகு நாம் துவக்கத்தில் கூறியபடி, நமக்குள் உள்ள உட்பகையை, வெளியார் தலையீடின்றி ஒழித்து, ஒன்றுபட்டு, இனங்களின் இலட்சியங்களுக்குச் சிதைவு ஏற்படாத வகையில் அரசுத்திட்டம் அமைத்து, ஆங்கிலர்முன் நீட்டுவோம். அப்போது அதனை எக்காரணமேனும் கூறி, ஏகாதிபத்யம் மறுக்குமானால், நமது மக்களின் வீரத்தின் உச்சநிலை எதுவென்பதைக் காட்டுவோம், என்ற மனப் போக்கு கொள்ளவேண்டும். விடுதலைப் பாதை அது தான்! விடுதலைப்போருக்குத் தேவையான கரத்தைத் தேடிப் பிடிக்க மறந்து, கனபாடிகளின் கரத்தைக் குலுக்கிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் இருக்கட்டும் ஒருபுறம், காங்கிரஸிலுள்ள வீர இளைஞர்களே! குலப்பாசம் கொண்டு குறும்பு செய்வோரின் கொட்டத்தை அடக்கும் திறமுடையோரே! உண்மை ஊழியரை மறக்காத உள்ளம் உடையோரே! அதோ அ. நி சபை நடவடிக்கைகளைக் காண்கிறீர்! உழைப்பு அவமாவதைக் காண்கிறீர்! உட்பகை மேலும் மேலும் வளரக் காண்கிறீர்! அவை, விந்தியத்தோடு நிற்கட்டும். நருமதைக்கு இப்பாலுள்ள நாம் ஒன்றுபடுவோம் வாரீர். நம்மில், தியாகத்திற்குத் தயாராக உள்ள, தமிழ்ப்பண்பினர் எல்லாம்' விடுதலை விரும்பிகள் எல்லாம், ஏகாதிபத்ய எதிர்ப்புணர்ச்சியுடன், சமூக அநீதிகளையும் வெட்டி வீழ்த்த வேண்டுமென்ற வீரஉணர்ச்சி கொண்டோரெல்லாம், ஒன்றுகூடுவோம் வாரீர்! வெற்றிபெற உழைப்போம் சேரீர்! என்று, அன்புடன் மட்டுமல்ல, நம்பிக்கையுடன், திராவிடர்கழகம் அழைக்கிறது? அந்தக்கழகம், சர், சீமான், ஜெமீன் தாரன், பதவிப்பிரியன், வர்ணாஸ்ரமி ஆகியோரின் கரத்தில் அல்ல—தியாகத் தழும்பேறிய பெரியாரின் கரத்தில் இருக்கிறது. அந்தக்கரமும், காங்கிரசில் தமிழ் இன உணர்ச்சி கொண்டு, வடநாட்டாரின் பொருளாதார ஏகாதிபத்யத்தில் நாம் சிக்கக்கூடாது என்று எண்ணும் வீரர்களின் கரமும் ஒன்றுபட்டால், வெற்றி உண்டு, அந்த வெற்றியிலே, நாட்டுக்கு வாழ்வுஉண்டு

(10-ம் பக்கம் பார்க்க)

# "நாமக்கல்லாரும் இனப்பற்றும்"

★

(S. A. ராமதுரை)

சென்னையில் 14—12—46ல் நடைபெற்ற இரண்டாவது எழுத்தாளர் மாநாட்டிலே, நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளையவர்கள் ஆரிய — திராவிட பிரச்னையைக் குறித்துப்பேசியிருக்கிறார். அப்போது 'ஆரியம்' 'திராவிடம்' என்றசொற்கள் தமிழல்ல, அயல்மொழியேயென்றும், பண்டைத்தமிழ் நூல்களில் அப்பதங்கள் கிடையாதென்றும், ஆகவே நம்மைத்திராவிடர் என்றழைத்துக்கொள்ளத் துணியும்போது அவன் ஆரியர் என்றே அழைத்துக் கொள்ளக்கூடாது என்றும் பேசியிருக்கிறார். மேலும், சில எழுத்தாளர்கள் ஆரிய திராவிட பிரச்னையைக் கிளப்பித் தமிழரை மீளாக்குழப்பத்தில் கொண்டுபோய் விடுவதாகவும் அவர் கூறியுள்ளதைப் பத்திரிகைவாயிலாக அறிந்தேன்

தன் உள்ளக்கிடக்கையை அங்கு எடுத்துக்கூறியதுபற்றி மகிழ்ச்சி. ஆனால், அரசியல் விவகாரங்களைப் பற்றி விவாதிக்க மேடை அதுவல்ல என்பது என் கருத்து. அதற்குத் தனி மேடை உண்டு.

நாமக்கல் கவிஞர் உள்ளத்திலே ஊடுருவிப்பாயும் அளவுக்கு, காங்கிரஸின் பிடிப்பில்சிக்குண்டிருக்கும்கவிஞரின் கருத்தினைத் துளைக்கும் அளவுக்கு இது கிளர்ச்சி வலுப்பெற்றிருப்பது கண்டு என்னுளம் பூரிக்கிறது.

நமது கவிஞர் பள்ளியில் பயின்றிருக்கலாம். பரீட்சையில் தேறியபத்திரங்கள் (Certificate) வாங்கியிருக்கலாம். அதில் மதம் (Religion) என்ற குறிப்புக்கு எதிரே அவரை ஓர் 'இந்து' என்றுதான் பதிவு செய்யப்பட்டிருக்கும். தன்னை ஓர் தமிழன் என்று கூறிக்கொள்ள மறுக்கப்பட்டார். 'இந்து' என்ற சொல் பண்டைத்தமிழ் நூல்களில் காணக்கிடைக்காது. 'இந்து' என்பது தமிழ்மொழியா? அரசாங்கம் அவரைப் பதிவு செய்வதெல்லாம் 'தமிழன் என்றல்ல, இந்து என்றுதான். 'இந்து' என்று கூறிக்கொள்ள எங்ஙனம் இசைந்தனரோ?

தமிழ்மொழியினராகிய தமிழர்கள் தாங்கள் திராவிட இனத்தவர்கள், தாங்கள் திராவிடர்கள், தாங்கள் "இந்துக்கள்" அல்ல என்று கூறுவதிலே தவறென்ன?

நமது கவிஞர் இந்துதேசசரித்திரம் படித்திருக்கலாம். முதல்பக்கத்தைப் புரட்டியதும் 'இந்தியாவின் எல்லைகள்' என்பதைப்பார்ப்பார். அடுத்தாற்போல் அவர்காண்பது "ஆரியரும் திராவிடரும்" என்றதலைப்பு. பண்டைத்தமிழ் நூல்களில் அப்பதங்கள் இல்லையே என்கின்ற காரணத்தால் மாணவர்கள் அப்பகுதியைப் படிக்காமல் விடுவதில்லை; சரித்திர ஆசிரியர்கள் அவற்றைப்போதிக்காமலும் விடுவதில்லை; மேனாட்டு சரித்திராசிரியர்கள் 'ஸ்மித்' 'டௌட்'' போன்றோர்கள் 'ஆரியரும், திராவிடரும்' என்பதைப் பற்றி எழுதாமல் விட்டதுமில்லை. அரசியல் அறிஞர்கள் இந்தியா என்பது ஒரு நாடல்ல, அது ஓர் உபகண்டம். அது பல இனங்களைக் கொண்ட கண்டம், ஒன்று ஆரிய இனம், மற்றொன்று திராவிட இனம் என்று பேசத் தவறியதுமில்லை. தற்கால இடைக்கால சர்க்காரின் அதிபதி, பண்டித ஜவாஹர்லாலும் 'தன் மகளுக்கு வரைந்த கடிதங்கள்'' என்ற புத்தகத்தில், 'பாஷைகளும், குடும்பங்களும்' என்ற தலைப்பில், அவர் எழுதியிருக்கும் கட்டுரையிலே, 'இந்தியாவின் மிகப் பழங் குடிகள் திராவிட இனத்தவர், அவர்கள் மிகவும் நாகரிகம் வாய்ந்தவர்கள், அவர்கள் பேசிய மொழி தமிழ்; அது மிகத் தொன்மை வாய்ந்தது, அதன் பிரிவுகள்தான் தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம்'' என்று கூறியிருப்பதை நாம் படிக்கத் தவறியதுமில்லை. அதனை நாம் அலட்சியப்படுத்துவதற்குமில்லை.

இனவுணர்ச்சி ஊட்டும் இயல்பில் நமது பண்டை ஏடுகள் இல்லாத காரணத்தால்தான் நம் நாடு கவிழ்ந்துக் கிடக்கின்றது, கவிஞர் விரும்பும் 'தமிழ் அரசு' தாழ்ந்து கிடக்கிறது. நமது இனம் திராவிட இனம், நமது மொழி தமிழ் மொழி, நாம் பேசுவது தமிழ், நாம் தமிழ் மொழியானர். இக் கருத்துக்கு நமது பண்டை நூல்கள், இடந்தரவில்லை யென்றால், பழம் புராணங்கள், இதிகாசங்கள் இடங்கொடுக்கவில்லை யெனறால், நமது நாட்டுச் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள்!

கவிவாணர்களும், பண்டிதர்களும் காலத்திற்கேற்ற கருத்துக் கொள்ள வேண்டும். ஒரு காலத்திலே நாம் கட்டை வண்டியிலேயே காசிக்குச் சென்றோம். இந்தக் காலத்திற்கு அது ஏற்குமா? எதற்கெடுத்தாலும் பண்டை, பண்டை என்று பழமை பேசிக்காலத்தைக் கடத்துதல் ஆகாது; இன உணர்ச்சி உண்டாக்கும் இலக்கியங்கள், திராவிட இனப்பற்று மிக்க நூல்கள், கவிகள், காவியங்கள், ஓவியங்கள் இல்லையென்றால் அவை உண்டாக்கப்படல் வேண்டும், அதற்கென நமது கவிஞர்கள் கங்கணங் கட்டிக்கொண்டு முனைந்து வேலை செய்யவேண்டும். 'திராவிடம்' என்ற மொழி பண்டை நூல்களில் இல்லையென்றால், இக்காலக் கவிஞர்கள் அதனை ஏற்றுக் கவி பாடுதல் வேண்டும்.

பழமை மோகங்கொண்டு நமது பகுத்தறிவைப் பாழ்படுத்தக்கூடாது- காலத்திற் கேற்ப கருத்துக்களைத் திருத்திக் கொண்டு நமது புலவர்கள் காவியங்கள் இயற்றித் தரவில்லையானால், இனவுணர்ச்சியை அலட்சியம் செய்து பழமையில் திளைப்பார்களானால் பகுத்தறிவு, அணுக்குண்டு உலகை அடக்கி ஆளும் இக் காலத்தில், தாங்கள் ஆராய்ச்சிக் கண்கொண்டு மக்களிடையே பகுத்தறிவை வளர்ப்பதை விட்டு, இதோபதேசம் செய்த காலத்தை விரும்புவார்களானால் எதிர்கால அறிவுலகம் அவர்களை ஏசா நிற்கும்!

எனவே, நாமக்கல்லார் இனப்பற்றை அலட்சியம் செய்யார் என்றே கருதுகிறேன்.

# பலசரக்கு

ஏகாதிபத்யச் சுரண்டலிலிருந்து இந்தியா விடுபடுவதுபோல், வடநாட்டாரின் சுரண்டலிலிருந்தும் தமிழ்நாடு விடுதலை பெறவேண்டும் என்பதே தமிழரின் பொருளாதாரக் கொள்கை. இதை கோயங்கா ஏற்பாரா?

—தமிழ் முரசு.

எனக்குத் தெரியாது. எழுத்தாளர் மாநாட்டிலே, தமிழ்நாடு A.தொகுதியில் சேர்க்கப்படக்கூடாது என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆவேசத்தோடு எதிர்த்த எ. ஜி. வெங்கடாச்சாரியாரைக் கேளுங்கள். அவர் விலாசம் வேண்டுமா? இதோ எ. ஜி. வெங்கடாச்சாரி, தினமணி காரியாலயம்! தினமணி யாருக்குச்சொந்தம் என்கிறீரா? சாட்சாத், கோயங்காவுக்குத்தான்!

* * *

காஷ்மீர் சமஸ்தானத்திலே 40 வருஷங்கள், மருந்து தயாரிக்கும் உரிமையைப் பிர்லா கம்பெனிக்கு, சமஸ்தான சர்க்கார் தந்திருக்கிறார்கள். கம்பெனியின் மூலதனம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல்!

—செய்தி.

பண்டித ஜவஹரை, உள்ளே நுழைய விட மறுத்ததற்குப் பிராயச்சித்த காரியம் போலும்! மருந்து தயாரிக்கும்போது, கல்வீச்சினால் ஏற்படும் காயத்துக்கு பூச்சு மருந்து தயாரிக்கும்படி, இப்போது காஷ்மீர் மகாராஜாவின் கட்சியாரின் கல்லடிபட்டு வரும் தோழியர் அருணா அசப் அலி சிபார்சு செய்வார் என்று நம்புகிறேன்.

* * *

மழையின் காரணமாக S. I. L F. நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாம்.

—செய்தி.

'தண்ணி'க்கு அவர்கள் பயப்படுபவர்களா என்று தம்பி கேட்கிறான். துஷ்டன்! குறும்புக்காரன்.

* * *

மட அதிபதிகள் மாநாடு மதுரையில் நடைபெற்று, தார்மீக சுயராஜ்யம் தேவை என்று அ. கி. சபைக்கு அறிவிக்கப்பட்டது. —செய்தி

நாரதரை, அனுப்பியிருக்கலாமே அட்லியிடம் சென்று பேச. தார்மீக வாதிகளுக்கு இது எம்மாத்திரம். தர்ப்பையை எடுத்தால் தவிடு பொடியாகி விடாதா. தற்காலம், புத்தறிவு, பகுத்தறிவு, சகலமும்.

* * *

ராமய்யர் தலைமை வகித்தார்—திருச்சி நேஷனல் கல்லூரித் தலைமைப் பேராசிரியர் பதவியிலிருந்து விலகும் சாரநாத ஐயங்காருக்கு நடைபெற்ற பாராட்டு விழாக் கூட்டத்துக்கு. R. சீனுவாசய்யர், வந்தனோபசாரம் கூறினார். செய்தி.

சர்வம்பிரம்ம மயம் ஜகத்!

* * *

பிரதி வருஷமும்! இலட்சத்து 70 ஆயிரம் குழந்தைகள் இறந்துவிடுகின்றன. சுகாதார டைரக்டர்

பைத்யக்கார மனுஷர்! இது, ஏதோ, வைத்ய வசதிக் குறைவின் விளைவு என்று எண்ணுகிறார். விஷயம் அது அல்ல. கருவில் உருவாகி வரும்போதே தாய் தந்தையரின், பக்திப்பிரபாவமகிமை. அந்தச் சிசுக்களுக்குக் கிடைத்து விடுகிறது. மாயாப் பிரபஞ்சம்—பிறவா வரம் தாரும்—என்ற தத்துவார்த்தங்களை தாய் தந்தை பேசக் கேட்டு, கருவில் உள்ள குழந்தைக்கும் பக்தி முற்றி, உலக ஆசை நீங்கி, செ! இந்த மாயாப் பிரபஞ்சத்திலே நாம் இருக்கக் கூடாது, இறைவன் திருவடி நீழலிலே இரண்டறக் கலப்போம்,என்று தீர்மானித்து, இறந்து விடுகின்றன வேறொன்றுமில்லை! கருவில் இருக்கும்போதேதான் சார், பிரகலாதாழ்வாருக்குப் பக்தி ஞானம் ஏற்பட்டது—தாய் பிறரிடம் உபதேசம் கேட்டபோது, கருவில் இருந்தபடி குழந்தை கேட்டுக் கொண்டிருந்ததாகத்தான் கதை—(தப்பு தப்பு)—புராணம்!!

* * *

கனகம்மாள் என்ற விதவை சர்க்காரின் ஜவுளி பங்கீட்டுத்திட்டத்தால் தாம் ஒரே புடவையுடனிருப்பதாகக் கூறினார். —தினமணி

புடவை, புதிதா? அப்படியானால் எத்தனை முழம்? பதினாறு என்றால்; சர்க்கார் அனுமதித்துள்ள அளவை விட அதிகம். ஆகவே உத்தரவை மீறின குற்றம் ஏற்படக்கூடும் என்று சட்ட மந்திரியின் அறிக்கை வெளிவரக் காணோம்!

* * *

முதலாளி வர்க்கமானது பல பத்திரிகைகளை ஆரம்பித்து அபேதவாதம் ஏற்படுவதைத் தடுக்க முயற்சிக்கிறது. —அருணாஅசப் அலி.

நானிருக்கப் புதுப் பத்திரிகைகளைத் துவக்குவானேன் என்று கேட்கிறாராம் சர்தார் படேல்.

* * *

இந்துக்களெல்லோரும், அரிஜனங்களைச் சமமாகப் பாவித்து சமஉரிமைகள் வழங்காவிட்டால், இந்து மதத்தில் ஒரு அரிஜன்கூட எஞ்சியிருக்க மாட்டான். —ஜக ஜீவன் ராம்.

ஆமாம்! அது இந்து மதத் தலைவர்களுக்குத் தெரியவில்லையே! எதிர்கால இந்தியாவிலே, வர்ணாஸ்ரம முறை இருக்கவேண்டுமென்று மட அதிபர்கள் மாநாடு கூறுகிறதே!! என்ன செய்யப் போகிறீர்?

8-ம் பக்கத் தொடர்ச்சி

அந்த வாழ்விலே இனிமை தவழும், சமரசம் குலுங்கும், சமதர்மக்கனி இருக்கும். ஒன்று சேரப்பணியாற்றுங்கள். வேலை நிறைய இருக்கிறது. விடுதலை பெறும் வேலையேகஷ்டமானது, ஆனால் அதை ஓட்டி, வாழ்வு அமைக்கவேண்டிய மாபெரும் வேலையும் இருக்கிறது, இந்த மகத்தான காரியத்தை, சர். கோபாலசாமிகளைக் கூட்டாளியாக்கிக்கொண்டு, நடத்தமுடியாது, பெரியாரின் பெரும்படையும், காங்கிரசிலே கனபாடிக்கோ, காட்டுக்கால முறைக்கோ கட்டுப்படாத வீரரும் ஒன்று கூடியே சாதிக்கமுடியும். அந்தக் கூட்டுக் கரம், வேண்டும், நம் நாடு விடுதலைபெற்று நல்வாழ்வு பெற. அதற்கு டில்லி அல்ல, இங்கேயே கூடுவோம். அதுவே நாம் காண வேண்டிய அரசியல் நிர்ணய சபை.

## பாடல்

2-ம் பக்கத் தொடர்ச்சி

டம் மிகவும் அண்மையில் இருப்பதால், இரண்டடி மூன்றடி ஆழம் தோண்டியவுடன் தண்ணீர் கிடைத்து விடுகிறது.

இனி, வைகையாற்றில், கை வைத்தவுடன் தண்ணீர் கிடைப்பதற்குரிய காரணத்தை விளக்கும் முறையில், திருவிளையாடல் புராணத்தில் ஒரு கதையுண்டு. 'குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்' என்ற தலைப்பின் கீழ் உள்ளது அந்தப் புதுமையான விளக்கம். அதனை இங்கு விளக்கப் புகுந்தால், ஒருவேளை சேக்கிழாரன்பர்கள், பெரிய புராணத்தோடு திருவிளையாடல் புராணத்தை ஒப்பிடுவதா என்பதாக ஓலமிடுவார்களோ என்று அஞ்சி விட்டுவிடுகிறேன். எனவே, கையினால் தோண்டிக் காணப்பட்ட நீர்ப்பரப்பில் சம்பந்தர் தம்முடைய ஏட்டை விட்டு, அது, அந்தத் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு எதிர் நோக்கிச் சென்றதென்று நான் கூறினால், "என்னய்யா இல்லாததை எல்லாம் இழுத்துப் போட்டு, எங்கள் புராணத்தை இழிவுபடுத்துகிறாய்' என்று சேக்கிழாரன்பர்கள் என்னைக் காய்ந்து புகைவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியுமாதலால், அப்படித்தான் நிகழ்ந்தது என்று நான் ஒருபோதும் கூற மாட்டேன். அவர்கள், வேண்டுமானால், வேண்டியதை வேண்டியவாறே செய்யவல்ல வேயுறு தோளிபங்கன், கையளவு தண்ணீரில் கூடக் கலம் (கப்பல்) ஓட்டுவார் என்று எண்ணி இறும்பூதெய்தட்டும். ஆனால், நான், அறிவோடு-ஆராய்ச்சிக்கு நிற்கக்கூடிய முறையிலேயே நிகழ்ச்சிகளை விளக்க விரும்புகிறேன்; அதுவே, என் நோக்கமும் கூட.

எனவே, மழைபெய்து, வைகையாற்றில் இருகரையும் புரளத்தண்ணீர் ஓடிற்று; அதில் சம்பந்தர் தம்முடைய ஏட்டை விட்டார்; அதில், அந்த ஏடு எதிர்த்தேறிச் சென்று, திருவேடகம் என்னும் ஊருக்குப் பக்கத்தில் தண்ணீர் நடுவே தேங்கி நின்றது; அதனைக் குலச்சிறையார் கண்டார் என்பதனையே 'உண்மை' யென்று வைத்து அது எந்த அளவுக்கு உண்மையாக இருக்க முடியும் என்பதையாவது ஆராய்ச்சி அன்பர்கள் 'இடந்தருவார்கள்' என்று நம்புகிறேன். எனவே, சம்பந்தர் வைகையாற்றில் ஏடு விட்ட சமயம், மழைபெய்து, ஆற்றுநிறையத் தண்ணீர் வந்திருக்கலாம் என்று வைத்துக்கொண்டாலும், மழைவெள்ளம், கலங்கலாக இருக்குமேயன்றி, ஒரு குறிப்பிட்ட பொருளைச் சுட்டிக்காட்டும் முறையில் தெளிவாக இருக்க முடியாது. அதிலும் சம்பந்தரால் விடப்பட்டதாகச் சொல்லப்படும் ஏடு, "வாழ்க அந்தணர்" என்ற சிறு பாடலைக் கொண்ட ஒரு சிறிய ஓலைநறுக்கு. இது, கலங்கமறக் கண்ணுக்குப் புலப்பட்டிருக்க முடியுமா? அதிலும் கரைபுரண்டு ஓடும் மழை வெள்ளத்தில், எத்தனையோ பொருள்கள் மிதந்து செல்லும்; சம்பந்தர் போட்ட ஓலை போன்ற பல ஓலைத் துண்டுகள், கரைபுரண்டோடும் காட்டு வெள்ளத்தில் மிதந்து செல்லும்; அவைகளுக்கிடையே இந்த ஓலையும் ஒன்றாக இருக்க முடியுமேயன்றி, சம்பந்தரால் விடப்பட்ட ஓலை 'இது தான்' என்று எப்படிக் கண்டு பிடிக்கமுடியும்?

ஒருகால், மற்றப் பொருள்கள் எல்லாம் தண்ணீரால் அடித்துக்கொண்டு போகப்பட்டன; இந்த ஏடு மட்டும் அப்படிச் செல்லாமல், தண்ணீரை எதிர்த்து வந்து தேங்கிநின்றது; அங்ஙனம் நிற்பதைக் குலச்சிறையார் கண்டார் என்றால், தேங்கி நின்றது தேக்கமரமா, நூக்க மரமா பார்வைக்குத் தென்பட. ஒருசிறிய ஓலைநறுக்கு; இதன் தேக்கம், பலகுப்பை கூளங்களை அடித்துச் செல்லும் ஆற்று வெள்ளத்தில், "என்னைப்பார்! நான்தான் சம்பந்தரால் விடப்பட்ட ஏடு" என்று சொல்வது போல் தனியாகத் தெரிந்ததென்பதைச் சிறுபிள்ளையாவது அறிவில் தெளிவுடையவர்கள் நம்புவார்களா என்றுகூட எண்ணிப் பார்க்கவேயில்லாமல், சைவத்திற்கு உயர்வு தேட முயன்ற சேக்கிழாரின் 'தெளிந்த' அறிவை என்னென்பது!

இனிச் சைவத்தின் உயர்வுக்காக இத்தகைய இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகளைக் கூறிய சேக்கிழார், ஒரு உண்மையை மட்டும் உள்ளவாறு எடுத்துக் கூறியிருக்கிறார். அதாவது, சம்பந்தரால் விடப்பட்ட ஏடு திருவேடகம் என்னும் ஊருக்குப் பக்கத்தில் போய் நின்றதென்று. திருவேடகம் என்னும் பெயரோடு உள்ள ஊர் ஒன்று சம்பந்தர் ஆற்றில் ஏடுவிட்ட காலத்திற்கு முன்பிருந்தே இருக்கிறது என்று சேக்கிழார் கூறியுள்ளார். அதாவது, சம்பந்தரால் விடப்பட்ட ஏடு, மதுரையில் இருந்து பன்னிரண்டுகல் தொலைவில் இருக்கின்ற திருவேடகம் என்னும் ஊருக்குப் பக்கத்தில், வைகையாற்றில், நீர் நடுவே தேங்கி நின்றது என்று சேக்கிழார் கூறியுள்ளார். ஆனால் சில சைவ அன்பர்கள், திருவேடகம் என்னும் பெயர் ஏற்பட்டதற்குக் காரணம் கூறும்போது, சம்பந்தரால் விடப்பட்ட ஏடு, அந்த இடத்தில் தங்கியதால், அந்த இடத்திற்கு, "ஏடகம்" என்ற பெயர் வழங்கப்பட்டு வருவதாக வேறு புராண மேற்கோள் காட்டிக் கூறுகின்

றனர். இவர்களின் இக்கூற்றுப்படி பார்த்தால், திருவேடகம் என்று இப்போது வழங்கப்பட்டு வரும் ஊர், சம்பந்தர் ஆற்றில் ஏடு விட்ட காலத்திற்கு முன், வேறு பெயரோடு இருந்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. ஆனால், சேக்கிழார் அக்கூற்றினை மறுக்கும் முறையில், சம்பந்தர் காலத்திற்கு முன்பிருந்தே திருவேடகம் என்ற பெயருடன் அந்த ஊர் இருந்தது; அந்த ஊரில் சம்பந்தர் விட்ட ஏடு சென்று தங்கிற்று என்று கூறுகிறார். இதில், யார் கூறுவது மெய், யார் கூறுவது பொய் என்று அறியப் பெரிய ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. ஏனென்றால், சம்பந்தரால் விடப்பட்ட ஏடு, அங்கு சென்று தங்கிய காரணத்தாலேயே அந்த இடத்திற்கு ஏடகம் என்ற பெயர் ஏற்பட்டதுதான் உண்மையென்றால், சேக்கிழார் அதனையும் சைவத்திற்கு உயர்வு கற்பிக்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக எடுத்து, "திருவேடகம் என்று இப்போது வழங்கப்படும் ஊர், சம்பந்தரால் ஏடு விடப்படுவதற்கு முன், இன்ன பெயரால் வழங்கப்பட்டுப், பின்னர், சம்பந்தரின் ஏடு அங்கு போய்த் தங்கியதால், அந்த ஊர் திருஏடகம் என மாறி வழங்கப்படுவதாயிற்று" என்று ஒரு பத்தோ பதினைந்தோ பாடல்களையும் பெரியபுராணத்தில் மிகுதியாகப் பாடிச் சேர்த்துச், சைவத்திற்கு மேலும் உயர்வு தேடியிருப்பார். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை. எனவே, சம்பந்தருடைய ஏடு தங்கிய காரணத்தால், அந்த ஊர் திருஏடகம் என வழங்கப்படுகின்றது என்று சில சைவ அன்பர்கள் கூறுவது, தாங்களும் சேக்கிழாரின் வழித் தோன்றல்கள் (வார்சு) என்று காண்பித்துச், சேக்கிழார் சைவத்திற்கு உயர்வு தேடியது போலவே தாங்களும் செய்தோம் என்று கூறிப் பூரிப்படையவே. ஆனால், சேக்கிழார் கூறியிருப்பதும் தாங்கள் கூறுவதும், ஒன்றை இன்னொன்று பொய்யாக்கும் முறையில் அமைந்து விட்டதே என்பதைக் கூட அவர்கள் ஆராய்ந்து பார்க்கவில்லை. ஏன் ஆராயப் போகிறார்கள்? சமயக் கோட்பாடுகளை ஆராய்வதே தவறு—பாவம் என்பதன்றோ அவர்கள் கொள்கை. ஆனால், சமயக் கோட்பாடுகளை ஆராய்வது தவறு—பாவம் என்று கருதுபவர்களே, சமயக் கோட்பாடுகளைக் கற்பிப்பதில் பொய்யும்—புளுகும்—புனைந்துரையும் பேசுவதைப் பெருமைக்குரிய புண்ணிய காரியம் என்று கருதுகிறார்களே! என்னே இவர் தம் போக்கு!

இனிச், சைவத்தைப்பற்றியே—சைவர்களுக்குள்ளேயே கட்சிப் பிளவுகள் உண்டாகி, ஒரு கட்சியார் கூறுவதை இன்னொரு கட்சியார் பொய்யாக்கி விடுவதால், சைவம் போன்ற சமயங்களும், அவற்றின் கடவுள் தன்மை வாய்ந்ததாகப் பேசப்படும் கோட்பாடுகளும் பொய் என்பதும்; அவை, ஒரு சிலரின் பிழைப்புக்கு ஆதாரமாக இருக்க உண்டாக்கப்பட்ட கற்பனைக் களஞ்சியங்கள் என்பதும் தெளிவாகின்றது.

—

## இயந்திர உற்பத்தி.

இந்திய சர்க்காரின் முழு ஆதரவுடன் கூடிய ஒரு புது கம்பெனி இந்தியாவில் துவக்கப்படுகிறது. இக்கம்பெனி, இந்தியாவில் மில்களுக்கான இயந்திரங்களை உற்பத்தி செய்யும். இவ்வியந்திரங்கள் இங்கிலாந்தில் செய்யப்படும் இயந்திரங்களைப் போலவே உறுதியும், வேலைத் திறமும் வாய்ந்ததாக இருக்குமாம்.

கஞ்சி டி. மு. கோர்ட்டு
O. S. 62—1942
E. P. 147—1946
E. A. 316—1946
E. A. 317—1946
Bet. ருதுபர்ணராஜு முதலியார்
(died) வகையரு-வாதிகள்
and அனந்தய்ய நாயுடு
வகையரு-பிரதிவாதிகள்.
ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா கடுவஞ்
சேரிகிராமம் பாளயத்தான் 13 ஷை
பூர்சாந்தம்மாள் 17 மைனர் ஆரோக்
கியம்மாள் 18 மைனர் ஜாகோப்நாயுடு
19 மைனர் தோமாஸ்நாயுடு 20 ஷை
மைனர்களுக்கு கார்டியன் 17ம் பிரதி
வாதி இவர்களுக்கு தெரிவிப்பது.
ஷை செம்பரில் நிறைவேற்று மனு
வும் மதிப்பு குறைக்க மனுவும் 2, 3
வாதிகள் ஏலம் கேட்க மனுவும் நோட்
சுக்கு 9—1—47ல் வாய்தா போட்
டிருப்பதால் அன்றுகாலை ஷை கோர்ட்
டில் ஆஜராகி ஆக்ஷேபணையை தெரி
வித்துக்கொள்ளவும். தவறினால்
Exparte செய்து மேல்நடவடிக்கை
உத்தரவு செய்யப்படும்.

S. Sundararaja Iyengar,
B. A. B. L.
Pleader for Plaintiffs
Conjeeveram 12-12-46.

காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு
O. P. 78 of 1946,
V. ராஜகோபாலாச்சாரியார்
மனுதார்.
காலம் சென்ற கறலபாக்கம்
ஸ்ரீனிவாசாச்சாரியார் பாரியாள்
மங்கம்மாளுக்கு சேரவேண்டிய
தொகைகள் விஷயமாக மனுதார்
வார்சு சர்ட்டிபிகேட்டு பெற
மனு கொடுத்து நோட்டீசுக்கு
23—12—46-ல் வாய்தா போட்
டிருப்பதால் ஆக்ஷேபணையை
அன்று தெரிவித்துக்கொள்ளவும்.

S. Sundararaja Iyengar,
B. A. B. L. Pleader
Conjeeveram: 17-12-46

Edited Printed Published by C, N. Annadurai M. A., a
Dravida Nadu Press, 317—319 Hodgsonpet Conjeeveran